# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

திங்கட்கிழமை 10.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com








## சாணக்கியனை இலக்கு வைப்பது ஆரோக்கியமானதல்ல

### சட்ட முதுமானி வை.எல்.எஸ். ஹமீட்



முஸ்லிம்களுக்காக சாணக்கியன் பேசினார் என்பதற்காக அவரை இலக்கு வைத்து நாம் முன்னெடுக்கும் எல்லைதாண்டிய பிரச்சாரம் ஆரோக்கியமானதல்ல என சட்ட முதுமானி வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் உரை தொடர்பாக முகநூல்களில் விமர்சிக்கப்படுவது தொடர்பாக கருத்து தெரிவித்து

07 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் செப்டம்பருக்குள் 20 ஆயிரம் உயிரிழப்புகள்

### வாஷிங்டன் பல்கலைக்கழகம் அறிவிப்பு

இலங்கையில் செப்டம்பர் மாதத்துக்கு முன்னர் சுமார் 20,876 பேர் வரை உயிரிழக்க நேரிடும் என்று அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா பரவலை கட்டுப்படுத்த தவறினால் தற்போதைய கணிப்புகளின் படி, எதிர்கால நிலைவரம் தொடர்பிலான கணிப்பீட்டை சுகாதார அளவீடுகள் மற்றும்

02 ஆம் பக்கத்தில்...

## உயர்தரப்பரீட்சை பெறுபேறு பகுப்பாய்வு அறிக்கை வடமாகாணம் 6 ஆம் இடம்,கிழக்குக்கு கடைசி இடம்

(வி.ரி.சகாதேவராஜா)

கடந்தவாரம் வெளியான 2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தரப் பரீட்சை தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையை கல்வி அமைச்சின் மதிப்பீட்டு ஆய்வுப்பகுதி வெளியிட்டுள்ளது.

மாகாணஅடிப்படையில் அறிக்கையின்படி முதலிடத்தை வடமேல் மாகாணமும் இறுதி இடத்தை அதாவது ஒன்பதாம் இடத்தை கிழக்கு மாகாணமும் அடைந்துள்ளது.அதே வேளை,வடமாகாணம்

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் அதிகூடிய தொற்றாக நேற்று 2659 பதிவானது

(காந்தன்)

இலங்கையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 2659 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது இலங்கையில் ஒரே நாளில் பதிவான அதிகூடிய கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை ஆகும்.

02 ஆம் பக்கத்தில்...

## பயணங்களை தவிருங்கள்

(ஊர்காவலன்)

இலங்கையில் திரிபடைந்த வீரிய மிக்க கோவிட் வைரஸ் பரவுவதனால் குறைந்தபட்சம் ஒரு மாத காலம் அத்தியாவசிய பயணங்களை தவிர்த்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முடிந்தளவு வீட்டில் இருந்து நேரத்தை செலவிடுமாறு, கோவிட் வைரஸ் திரிபு தொடர்பில்

02 ஆம் பக்கத்தில்...

## முஸ்லிம் ஆசிரியர்ளுக்கான பெருநாள் முற்பணம் இன்று வழங்கப்படும்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண முஸ்லிம் ஆசிரியர்களுக்குரிய நோன்புப் பெருநாள் முற்பணம் இன்று திங்கட்கிழமை வலயக் கல்வி அலுவலகங்கள் மூலம் வழங்கப்படுமென மாகாண கல்வித்

02 ஆம் பக்கத்தில்...

## கந்தளாய் சீனி ஆலை இளைஞர் படையணி நிலையம் கோரோனா தடுப்பு மத்திய நிலையமாக மாற்றம்



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் சீனி ஆலை இளைஞர் படையணி நிலையத்தினை கொரோனாதடுப்பு மத்திய நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## கிழக்கு மாகாணத்தில் இரத்தான வருடாந்த இடமாற்றம்

(அப்துல் யாசீம்)

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலர்களுக்கான வருடாந்த

02 ஆம் பக்கத்தில்...


MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
வருமான வரிப்படிவம் நிரப்புதல்
60 CHF மட்டுமே
உங்களின் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் ஓர் நம்பிக்கையான நிறுவனம்
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch


## முத்து நகர் கிராமத்தில் காட்டு யானை தாக்குதலால் இரு கடைகளுக்கு சேதம்



( ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முத்து நகர் கிராமத்தில் நுழைந்த காட்டு யானையால் இரு கடைகளுக்கு

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் கோரோனா தெளிவூட்டல்





மட்டக்களப்பில் கொவிட் 19 தொற்றுநோய் தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் மக்களைப் பாதுகாப்பதே எமது நோக்கம் கொவிட் 19 மூன்றாம் அலையின் பின்னர் நாளுக்கு நாள் மரணங்கள் அதிகரித்துவருவதுடன் நாளாந்தம் தொற்றாளர்களை இனங்காணும் வீதமும் அதிகரித்தவண்ணமே உள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பட்ட

02 ஆம் பக்கத்தில்...


"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206


## மக்களின் பிரச்சினையை தீர்க்க போராடும் எங்களுக்கு விமர்சனங்கள் ஒரு போருட்டல்ல

(நூருள் ஹுதா உமர், ஐ.எல்.எம். நாஸிம்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் பாரளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீனை அடாவடித்தனமாக கைது

02 ஆம் பக்கத்தில்...








## சாய்ந்தமருதில் கொரோனா விழிப்புணர்வு கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் ஆலோசனைக்கு அமைவாக

02 ஆம் பக்கத்தில்...




## மக்களின் பிரச்சினையை தீர்க்க போராடும் எங்களுக்கு விமர்சனங்கள் ஒரு பொருட்டல்ல

செய்திருக்கும் இவ் அரசாங்கம் நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்தி அவருக்கான தீர்பை உறுதிப்படுத்த வேண்டும். என்பதுடன் தலைவரின் கைதை கண்டித்தும், எமது துக்கத்தை வெளிக்காட்டும் முகமாகவும் எதிர்வரும் பெருநாள் தினத்தன்று எமது வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் கறுப்பு கொடியை பறக்க விட்டு முஸ்லிம்கள் ஆகிய நாம் பிரதேச வாதங்கள், கட்சி பாகுபாடு இல்லாத சகோதரத்துவத்தை வலியுறுத்துவோம் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கிழக்கு மாகாண இளைஞர் அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி முஸர்ரப் முதுனபீன் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை பொத்துவில் தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அங்கு உரையாற்றிய அவர் மாகாண சபை கணவில் இருக்கும் சில கட்சி முக்கியஸ்தர்களும் என் மீது அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களும் அக்கரைப்பற்றை சேர்ந்த முன்னால் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் உட்பட பலரும் புனித மிகு நோன்புகால மான்பையும் மீறி இட்டுக்கட்டப்பட்ட பொய்யான செய்திகளை பரப்பிவருகிறார்கள். இவர்கள் இறைவனை பயந்து கொள்ளட்டும் என இங்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

மேலும் தலைவரின் கைது தொடர்பில் வீணாக படம் காட்டுவோர் மத்தியில் உளத்தூய்மையோடு அதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருகிறேன். என்னுடன் இணைந்து முஸ்லிம் பாரளுமன்ற உறுப்பினர்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றஊப் ஹக்கீம் எம்.பி, எ.எல்.எம் அதாஉல்லா எம்.பி உட்பட பலரும் உரைத்த குரலில் குரல் எழுப்பி வருகிறோம். தலைவர் உட்பட அநியாயமாக கைது செய்யப்பட்டுள்ள முஸ்லிம் தலைவர்கள் ,பிரமுகர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே மனிதாபிமானமுள்ள எல்லா முஸ்லிம்களினதும் எதிர்பார்ப்பாக உள்ளது.

பிரதமர், அமைச்சர்கள், ஆளும் தரப்பு எம்பிக்கள், அரச தரப்பு முக்கியஸ்தர்கள்போன்றோர்களை சந்தித்து இந்த சமூகத்தின் தேவைகள் தொடர்பிலும் பிராந்திய ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பிலும் முஸ்லிம் சமூகத்தின் இக்கட்டான அரசியல் சூழ் நிலைகள் தொடர்பிலும் பேசிவருகிறோம். இது தொடர்பில் பகிரங்கமாக ஊடகங்களுக்கு சமூக நலன் கருதி கருத்து தெரிவிக்க விரும்பவில்லை இதற்காக விமர்சிப்பவர்களை பற்றி நாங்கள் கவலைப்பட போவதுமில்லை . பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பில் எனக்கு இருந்த மாறுபட்ட கருத்துக்கள் காரணமாகவே நான் அதில் கலந்து கொள்ளவில்லை என்பதுடன் அண்மைய சாணக்கியன் எம்.பி இன் பாரளுமன்ற உரை கல்முனையின் அந்த அரச காரியாலங்கள் தொடர்பிலான போதியளவு அறிவின்மை காரணமகாவே என நான் விளங்குகிறேன் .

பொத்துவில மக்கள் அவர்களுடைய பணத்தை செலவளித்து அவர்களிடைய அன்பினூடாக என்னை நம்பி வாக்களித்து பாராளுமண்றம் அனுப்பி உள்ளார்கள். மேலும் அம்பாறை மாவட்ட மக்களும் என்னை நம்பி வாக்களித்துள்ளார்கள் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசியே தீர்வை பெற முடியும் அதை விடுத்து எதிர் அணியில் அமர்ந்து கொண்டு கோசமெழுப்புவதன் மூலம் எதையும் சாதித்து விட முடியச்ாது.

அ.இ.ம.கா என்பது றிசாட் பதியூதின் அவர்களுடைய தலைமைத்துவத்தை நாடி இருக்கும் கட்சி. மக்கள் காங்கிரஸின் அடையாளம் அவரே. அவர் மக்கள் காங்கிரஸ் இல்லாது வேறு புதியதொரு கட்சியை உருவாக்கினாலும் புதிய சின்னத்தை அறிமுகம் செய்தாலும் மக்கள் அவரை ஆதரிப்பார்கள். அவர் சிறையில் இருந்தாலும் மக்கள் காங்கிரஸின் தலைவர் அவரே இருந்தாலும் அண்மையில் கட்சியில் அரசியல் பீடத்தின் பெரும்பான்மையோர் எடுத்த முடிவுக்கு நான் கட்டுப்படுகிறேன் என்று தெரிவித்தார்.




## கல்குடா வலயத்திலிருந்து மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு மாணவி



கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட வந்தாறுமுலை மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரப்பரீட்சை முடிவுகளின் படி உயிரியல் விஞ்ஞான பிரிவில் 2அஆ (பௌதீகவியல்அ ,இரசாயனவியல்அ ,உயிரியல்) என்ற பெறுபேற்றில் மாவட்ட நிலையில் 06ம் நிலையை பெற்று கிருபைரெத்தினம் ஜெயந்தினி என்ற இம்மாணவி பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அத்தோடு இம்மாணவியே இப்பாடசாலையில் மருத்துவ துறைக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது மாணவி என்பதும் ,கல்குடா வலயத்தில் மருத்துவ துறைக்கு இம்முறை தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாவடிவேம்பை சேர்ந்த கிருபைரெத்னம் நாகம்மா தம்பதிகளின் மகளான ஜெயந்தினி கஷ்ட குடும்ப பின்னணியை கொண்டவர் . இவ்வாறான சூழலில் தனது கல்வியை தொடர்ந்து மாவட்டத்தில் 06ம் இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்ததோடு எதிர்கால மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு சிறந்த முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருதில் கொரோனா விழிப்புணர்வு கூட்டம்

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜே.நிஸ்தார் அவர்களின் மேற்பார்வையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான எம்.எம். பைசால் மற்றும் எம்.பைலான் ஆகியோரை கொண்ட குழு கொவிட்19 நோயில் இருந்து பொதுமக்களை முன் கூட்டியே பாதுகாக்கும் நோக்கில் வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது இடங்களுக்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டது.

இந் நிகழ்வின் போது வர்த்தகர்களுக்கு அறிவூட்டல் வழங்கப்பட்டதுடன் இனிவரும் காலங்களில் இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடப்பட்டது. அதே போன்று பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் கதிப்மார்களுக்கு கொரோனா விழிப்புணர்வு மற்றும் சுகாதார நடவடிக்கைளை விளக்கும் கூட்டம் சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் கேட்போர் கூடத்தில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எம்.அல் அமீன் றிசாட் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜும்மா பெரியபள்ளிவாசல் தலைவர் ஏ. ஹிபதுல் ஹரீம் ஹாஜி, செயலாளர் அப்துல் மஜீத் ரொஷான் உட்பட நிர்வாகிகள் மற்றும் மௌலவிமார்கள், சுகாதார தரப்பினர் என பலரும் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பில் கொரோனா தெளிவூட்டல்

விழிப்புணர்வு நடவடிக்கைகளை மாவட்ட கொவிட் 19 செயலணியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் சிரேஸ்ட அத்தியட்சகர் சுதத் மாசிங்க தலைமையில் மட்டக்களப்பு நகர் பகுதியில் விழிப்புணர்வு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர். குமாரசிறி மற்றும் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உயரதிகாரிகள் இவ்விழிப்புணர்வு நடவடிக்கையில் பங்கேற்றிருந்ததுடன், தமிழ் மொழியில் வடிவமைக்கப்பட்ட விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் இதன்போது பொது மக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முத்து நகர் கிராமத்தில் காட்டு யானை தாக்குதலால் இரு கடைகளுக்கு சேதம்

சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவு புகுந்த காட்டு யானையால் குறித்த பகுதியில் கடைகளை உடைத்து பொருட்களையும் சேதப்படுத்தி விட்டுச் சென்றுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர். இதற்கு முன்னரும் காட்டு யானையால் திடீர் சேதங்கள் விளைவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. காட்டு யானையின் தொடர் தாக்குதலால் நிம்மதியாக தூங்க முடியாமலும் கஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பல முறை உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கின்றனர். தங்களது அன்றாட வாழ்வாதாரமாக சிறிய இக்கடை மூலமே வாழ்ந்து வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். தொடர் காட்டு யானை அச்சுறுத்தல் இப் பகுதியில் நிலவி வருகிறது எனவே யானைகளின் தாக்குதலில் இருந்து தங்களையும் தங்களது உடைமைகளையும் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




## கிழக்கு மாகாணத்தில் இரத்தான வருடாந்த இடமாற்றம்

இடமாற்றம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இந்த விடயத்தை மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்ற சபையின் முடிவுகள் கிழக்கு மாகாண இணையத்தளமான EP.gov.lk எனும் மாகாண சுகாதார சேவைகள் வலைப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.அத்துடன் மேன்முறையீட்டிற்கான விண்ணப்ப படிவமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கோவிட் 19 சூழ்நிலை காரணமாக 2020 எட்டாம் மாதம் 29ஆம் திகதி வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த முடியாது போயிருந்தது.

இந்நிலையில் இம்முறை 2021ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்ற சபையின் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்காலிகமாக இடமாற்றங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முஸ்லிம் ஆசிரியர்ளுக்கான பெருநாள் முற்பணம்

திணைக்கள பிரதம கணக்காளர் எம்.ஏ.ரபீக் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் நிலவும் கொரோனா தொற்று பரவல் காரணமாக மாகாண கல்வி திணைக்கள நிருவாக நடவடிக்கைகள் கடந்த இரு வாரங்களாக பாதிக்கப்பட்டுள்ளதாலும் திறைசேரி மூலம் பணம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதமுமே இவர்களுக்கு பெருநாள் முற்பணம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளரும் தானும் மேற்கொண்ட முயற்சி காரணமாக மாகாண திறைசேரியிடமிருந்து இதற்கான நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நிலையில் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு பெருநாள் முற்பணத்தினை 10ஆம் திகதி திங்கட்கிழமை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சகல வலயக் கல்வி அலுவலக கணக்காளர்களும் கேட்கப்பட்டிருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஆசிரியர்களுக்கு இதுவரை நோன்பு பெருநாள் முற்பணம் வழங்காமை குறித்து இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் அதிகூடிய தொற்றாக நேற்று 2659

அதற்கமைய, நாட்டில் கொவிட் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 125,906 ஆக அதிகரித்துள்ளது.

இதனிடையே கொவிட்19 தொற்றுக்குள்ளான 20,657 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் நாட்டில் சிகிச்சை பெற்று வரும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இதேவேளை, இலங்கையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொரோனா தொற்றுக்குள்ளான 1,365 பேர் குணமடைந்துள்ளதையடுத்து மொத்த எண்ணிக்கையும் 104,463 ஆக உயர்வடைந்துள்ளது.

இலங்கையில் மேலும் ஒரு கர்ப்பிணி தாய் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

காலி, கராப்பிட்டிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணி தாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அத்தோடு, யாழ்ப்பாணத்தில் வடமராட்சி உடுப்பிட்டியைச் சேர்ந்த 88 வயதுடைய முதியவர் கொவிட் 19 நோயினால் உயிரிழந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதன்மூலம் யாழ்.மாவட்டத்தில் கொவிட் 19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணிநேரத்தில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 426 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 6,965 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பயணங்களை தவிருங்கள்

ஆய்வு நடத்தும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் பேராசிரியர் சந்திம ஜீவன்தர மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வீரியமிக்க கோவிட் வைரஸ் மரபணு தனிமைப்படுத்தல் நிலையங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதிலும் அது சமூக மட்டத்தில் பரவவில்லை என நினைக்க முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் பிரித்தானிய வைரஸ் மிகவும் வேகமாக பரவும் மரபணுக்கள் எனவும், பிரித்தானிய மரபணுவில் ஆபத்துக்கள் அதிகம் எனவும் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வளவு வீரியமிக்க வைரஸ் பரவினால் அது உடலுக்குள் வரவிடாமல் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பு மக்களுடையதென அவர் குறிப்பிட்டுள்ளார். சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் பின்பற்றுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கந்தளாய் சீனி ஆலை இளைஞர் படையணி

நூறுக்கும் மேற்பட்ட நோயாளர்களை தடுத்து வைத்து கிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கந்தளாய் இளைஞர் படையணி நிலையத்தினை பார்வையிடுவதற்காக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரல. நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் போது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜி.எம். கொஸ்தாவிடம் விபரங்களை பாராளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்தார்.

## உயர்தரப்பரீட்சை பெறுபேறு பகுப்பாய்வு அறிக்கை

ஆறாவது இடத்தை அடைந்துள்ளது.

மாகாணஅடிப்படையில் முதலிடத்தை வடமேல்மாகாணமும் இரண்டாமிடத்தை மேல்மாகாணமும் மூன்றாமிடத்தை ஊவா மாகாணமும் நான்காம் இடத்தை தென்மாகாணமும் ஜந்தாம் இடத்தை சபரகமுவ மாகாணமும் ஆறாம் இடத்தை வடமாகாணமும் ஏழாம் இடத்தை மத்தியமாகாணமும் எட்டாமிடத்தை வடமத்தியமாகாணமும் ஒன்பதாமிடத்தை கிழக்குமாகாணமும் பெற்றுள்ளது.




## இலங்கையில் செப்டம்பருக்குள் 20 ஆயிரம் உயிரிழப்புகள்

மதிப்பீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கையில் ஜூன் 14 அன்று தினசரி இறப்பு எண்ணிக்கை அதி உச்சத்தை அடையும் என எதிர்பார்ப்பதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இது 264 இறப்புகளாக இருக்கும் எனவும் சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதுவேளை, இந்த எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து 2021 செப்டம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் 88 தினசரி இறப்புகள் பதிவாகலாம் எனவும் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தின் கணிப்புகள் காட்டுகின்றன.

இதற்கமைய மருந்து வளங்களின் பயன்பாடுகள் இந்த ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி உச்சமாக இருக்கும் என்று தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த காலப்பகுதியில் மருத்துவமனை படுக்கைகளின் தேவை 17,049 ஆகவும் தீவிர சிகிச்சை பிரிவின் படுக்கைகளின் தேவை 3,451 ஆக இருக்கும் என சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் தெரிவிக்கின்றது.



SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch | Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65




உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு, கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+0966502126923
n.uthayakumar1981@gmail.com




SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி




SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch




MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen




Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# 'ஜனாஸாக்களை பல நாட்கள் குளிரூட்டிகளில் வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்'

(ந.குகதர்சன்)

ஓட்டமாவடிக்கும் தனிமைப்படுத்தல் நிலமை ஏற்பட்டால் கொரோனா பாதிப்பு ஜனாஸாக்களை பல நாட்கள் குளிரூட்டிகளில் வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம் என ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூலம் கொவிட் 19 ஜனாஸா நல்லடக்கம் தொடர்பாக ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிரதேச செயலகம், பொது அமைப்புக்கள் மற்றும் பிரதேச சபை என்பன இணைந்து எடுத்த தீர்மானத்திற்கு அமைவாக இன்று மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோளில்; மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொது மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோளானது;

ஓட்டமாவடி பிரதேசத்தில் கொவிடடினால்; மரணமடையும் ஜனாஸா நல்லடக்க பணிகளை இரு உலமாக்கள், பிரதேச சபை ஊழியர்கள், சுகாதார வைத்திய அதிகாரி பொது சுகாதார பரிசோதகர்கள், ஜனாஸா நலன்புரி சங்கத்தினர், வர்த்தக சங்க பிரதிநிதிகள் மற்றும் இராணுவத்தினர் மிகவும் கரிசனையுடனும், தியாகத்துடனும் மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களினை எமது மேலானதுஆக்களில் இணைத்துக் கொள்வோம். நேற்று வரை நூற்றுக்கு மேற்பட்ட ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் நாட்டில் இன்று மிக வேகமாக பரவி வரும் பயங்கரமான கொவிட் 19 தாக்கம் காரணமாக மரணங்கள் அதிகரித்து வருவதையும், நல்லடக்க பணியினது சிரமங்களும் ஆபத்துக்களும் அதிகரிப்பதையும் நாம் அறிவோம்.

இந்த வேகத்தில் ஓட்டமாவடி பகுதியும் கொரோனா தாக்கத்தின் காரணமாக தனிமைப்படுத்தல் நிலமை உட்பட்டால்; கொரோனாவினால் நாடலாவிய ரீதியில் மரணமடையும் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யமுடியாமல் பல நாட்கள் குளிரூட்டிகளில் வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படலாம்.

எனவே நிலைமைகளை மிகக் கவனமாக கையாளும் முகமாக கொரோனாவினால் மரணமடையும் ஜனாஸாவை நல்லடக்கம்



செய்யும் இடத்திற்கு நெருங்கிய உறவினர்கள் இருவரும் வாகன சாரதியுமே பாதுகாப்புப் படையினர் உள்வர அனுபதிப்பதன் காரணமாக இருவர் மாத்திரமே உடன் வருமாறும், ஏனையோர் வருவதை முழுமையாக தவிர்ந்து கொள்ளுமாறும் வினயமுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இங்கு மக்கள் அதிகமாக வருகை தருவதன் காரணமாக இப்பிரதேசத்தில் கொரோனா நோய் பரவல் ஏற்படுவதை தடுக்கும் முகமாக இவ்வறிவித்தல் விடுக்கப்படுகின்றது. நிலைமை சீரடைந்ததும் மையவாடிகளை தரிசிப்பதற்குரிய சிறந்த ஏற்பாடுகள் செய்து தர முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# திருமலையில் உலருணவு பொதி வழுங்கல்

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா முடக்கம் காரணமாக தொழில் இழந்த மக்களுக்காக 250 நிவாரணப்பொதிகள் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

முஸ்லிம் உதவி அமைப்பு இதனை மேலதிக அரசாங்க அதிபர் ஜே. அருள்ராஜ் அவர்களிடம் கையளித்தனர். ஒரு குடும்பத்திற்கு மூவாயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொருட்கள் இதில் வழங்கப்பட்டன.

இப்பொருட்கள் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளன. இதேவேளை அரசும் கொரோனா காரணமாக முடக்கப்பட்ட மக்களுக்கு 5ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப்பொருட்களை பிரதேச செயலகம் ஊடாக வழங்கி வருவதாக மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை திருகோணமலை பொதுச் சுகாதார பிரிவு, உப்புவெளி பிரிவு, கிண்ணியா, குறிஞ்சாங்கேணி பொதுச்சுகாதார பிரிவுகளில் கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்படுவது தொடர்வதுடன் மாவட்டத்தில் இறப்பு 19ஆக அதிகரித்துள்ளது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.



# ஓட்டமாவடியில் பொதுமக்கள் நடமாடும் இடங்களில் தொற்று நீக்கம்

(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி பிரதேசத்தில் பொதுமக்கள் நடமாடும் இடங்களை தொற்று நீக்கும் நடவடிக்கை கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா பரவல் கட்டுப்பாட்டு திட்டத்துடன் இணைந்த வகையில் இந்த தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்த குறித்த பகுதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய, பொதுச் சந்தை, பஸ் தரிப்பிடங்கள், மீன் விற்பனை நிலையங்கள், புடவைக் கடைகள், சலூன் கடைகள் உட்பட வர்த்தக நிலையங்கள் போன்றவற்றுக்கு தொற்று நீக்கப்பட்டுள்ளன.

ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் இடம்பெற்ற இப் பணியில் பிரதேச சபை ஊழியர்கள் இணைந்து கொண்டு தொற்று நீக்கும் வேலையினை மேற்கொண்டனர்.

# கோறளைப்பற்று மத்தியில் வீடு ஒன்றினை சேதப்படுத்திய குரங்கு



(ந.குகதர்சன்)

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் குரங்குகளின் அட்டாசகம் அதிகரித்துள்ள நிலையில், வாழைச்சேனை ஹைறாத் வீதியில் வீடு ஒன்றினை சேதப்படுத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பிரதேசத்தில் சில மாதங்களாக குரங்குகளில் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது. இதனால் பிரதேசத்தில் காணப்படும் பயன்தரும் மரங்கள் மற்றும் வீட்டு கூரைகள் என்பவற்றை சேதப்படுத்தி வருகின்றது.

இவை தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதுடன், சில சொத்துக்களும் சேதமாக்கப்பட்டு வருவதுடன், சிலருக்கு காயங்களும் ஏற்பட்டு வருவதாகவும் மக்கள் கவலை தெரிவின்கின்றனர்.

குறித்த பகுதியில் குரங்குகளின் வருகை மீண்டும் தொடங்கிய நிலையில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்பட்டு வருகின்றது. இதனால் குறித்த வீட்டின் கூரையை உடைத்து வீட்டினுள் காணப்படும் பொருட்களை சேதப்படுத்தி உள்ளதுடன், வீட்டில் இருந்தவர்களை தாக்க முற்பட்டதாகவும், இதனால் தாங்கள் வெளியில் ஓடி விட்டதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

எனவே வாழைச்சேனை பிரதேசத்தில் தொடர்ச்சியாக குரங்குகளில் வருகை இடம்பெற்று வருவதால் மக்களின் பாதுகாப்பு கருதியும், குரங்குகளின் உயிரை பாதுகாக்கும் வகையிலும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.



# சேனைக்குடியிருப்பில் இரு மாணவிகள் 3 ஏ





(காரைதீவு சகா)

கல்முனையையடுத்துள்ள சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில், இம்முறை க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின்படி இரு மாணவிகள் 3 ஏ சிறப்பு சித்திகளை பெற்றுள்ளர்.

மாணவிகளான யோகராசா லிதுர்ஷனா 3ஏ பெற்று மாவட்டத்தில் 12ஆவது நிலையிலும், தவக்குமார் கேமஷாலினி 3ஏ பெற்று 56 ஆவது நிலையிலும் சித்திபெற்றுள்ளனர்.

# காரைதீவில் கொவிட் தடுப்புக்கான ஆலய விசேடபூஜை



கொவிட் - 19 தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு அம்பாளின் நல்லாசி வேண்டி காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தலைமையில் இடம்பெற்ற விசேட பூஜையின்போது.....

படங்கள்; காரைதீவு சகா






# முகக்கவசம் அணியாதவர்களை தூக்கிச் சென்ற பொலிஸார்







(க.கிஷாந்தன்)

பண்டாரவளை பொலிஸ் தலைமை அதிகாரி சந்தன ஜயதிலக தலைமையில் பண்டாரவளை நகர பகுதியில் இடம்பெற்ற விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பண்டாரவளை நகர்ப்பகுதியில் முகக்கவசம் அணியாதோர் மற்றும் சுகாதார நடைமுறையினை பின்பற்றாதோர் 30 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்களை பொலிஸார் தூக்கி சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

பண்டாரவளை நகரப் பகுதியில் முகக்கவசம் அணியாதோர், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# எரிவாயு சிலிண்டர் வாகனம் குடை சாய்ந்து விபத்து





(வி.ரி.சகாதேவராஜா)

கோமாரியில் இடம்பெற்ற வாகன விபத்தில் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச்சென்ற கனரக வாகனம் தடம்புரண்டு சேதத்திற்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.40மணியளவில் கோமாரி பாலத்தில் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவிலுக்கு எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச் சென்ற கனரக வாகனத்தின் ரயர் பாலத்தடியில்வைத்து வெடித்தகாரணத்தினால் வாகனம் தடம்புரண்டு இவ்விபத்து இடம்பெற்றதாகக்கூறப்படுகிறது.

திடீரென ஏற்பட்ட நிலைமையை சமாளிக்க சாரதி திடீர் பிரேக் போட்டதும் பாலத்தினுள் விழாமல் காப்பாற்றப் பட்டது. எனினும் சிலிண்டர்கள் வீதியில் வீழ்ந்து சிதறின. அதிஸ்டவசமாக எதுவும் வெடிக்கவில்லை அத்துடன் சாரதிக்கோ உதவியாளருக்கோ எவ்வித பாதிப்புமில்லை என நேரில் கண்ட பொத்துவில் பிரதேசசபை உறுப்பினர் த.சுபோதரன் தெரிவித்தார்.

# பொலிஸாரும், இராணுவமும் இணைந்து மக்கள் மத்தியில் கொரோனா விழிப்பூட்டல்




(ந.குகதர்சன்)

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்கில் இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து தொடர்ந்தும் பல்வேறு மக்கள்நல வேலைத் திட்டங்களை நாடு பூராகவும் முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் நோக்கில் ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தில் பொலிஸாரும், இராணுவமும் இணைந்து மக்கள் மத்தியில் கொரோனா நோய் தொடர்பான விசேட விழிப்பூட்டல் நடவடிக்கையை இன்று மேற்கொண்டனர்.

வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜீ.எஸ்.ஜயசுந்தர தலைமையில் இடம்பெற்ற இவ் விழிப்பூட்டும் நடவடிக்கையில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சீ.ஐ.சந்திரகுமார மற்றும் சித்தாண்டி இராணுவ படைப் பிரிவினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு துண்டுப் பிரசுரங்கள் வழங்கி மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர்.

இதன்போது நூற்றுக்கணக்கான வாகனங்கள் சோதனை செய்யப்பட்டதுடன், முககவசத்தினை முறையாக அணியாத பலருக்கு இதன்போது பொலிஸாரினால் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

# பண்டாரவளை நகர பொதுச்சந்தை காலவரையறையின்றி மூடல்



(க.கிஷாந்தன்)

பண்டாரவளை நகர பொதுச்சந்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் சுகாதார அதிகாரிகளும், பொலிஸாரும் தொடர்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக இவ்வாறு சந்தை மூடப்பட்டிருந்தாலும் இன்று காலை சில வியாபாரிகள், அத்துமீறி விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து பண்டாரவளை மாநகர சபை, பிரதேச செயலக சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பண்டாரவளை பொலிஸார் இணைந்து அவர்களை திரும்பியனுப்பினர்.

வெல்லவாய, ஹப்புத்தளை பகுதிகளைச் சேர்ந்த சில்லறை வியாபாரிகளே இவ்வாறு திருப்பி அனுப்பட்டனர்.

# யாழ்.கொடிகாமம் முழுமையாக முடக்கப்பட்டது



கொடிகாமம், கொடிகாமம் மத்தி, கொடிகாமம் வடக்கு கொரோனா அச்சுறுத்தல் காரணமாக முடக்கப் பட்டுள்ளது. இதனால் கொடிகாமம் மத்தியினூடா புலோலி, கச்சாய் வீதி கொடிகாமத்தில் இருந்து பருத்தித் துறை செல்லும் பிரதான வீதியும் பொலிஸார் மற்றும் இராணுவத் தினரால் கடந்த மூன்று நாட்களாக பயணத்தடை ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக யாழ் மாவட்ட அரச அதிபர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர்களது கவனத்திற்கு ஊடகவியலாளர்கள் மற்றும் சில ஊடகங்கள் கொண்டு சென்றதையடுத்து நேற்று பிற்பகல் முதல் இவ் வீதியினூடான போக்கு வரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா நடைமுறை விதிகளுக்கு அமைய முடக்கப்பட்ட பகுதிகளினூடன பிரதான வீதிகளின் போக்கு வரத்து தடை செய்ய முடியாது என்ற விதிக்கு அமைய கொடிகாமம் பருத்தித் துறை பிரதான வீதி மீளவும் திறந்து விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வீதியால் அப்போது வாகம் குறைவு என்பதால் ஏனைய வாகனங்களுக்கு எவ்வித பாதிப்புமில்லை. எனினும் சிறிதுநேரலம் பொத்துவிலுக்கான போக்குவரத்து பாதிக்கப் பட்டிருந்தது.

# கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட வேண்டும்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

விரைவில் வெற்றிடமாகவுள்ள கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிக்கு முறைப்படி விண்ணப்பங்களைக் கோரி தகுதியானவர் நியமிக்கப்பட வேண்டும் என அரச சேவை ஆணைக்குழுவிடம் இலங்கை கல்வி நிருவாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளராக தற்போது கடமையாற்றுபவர் எதிர்வரும் ஜுலை மாதம் 14ஆம் திகதி கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெறவுள்ளார்.

அரச சேவை ஆணைக்குழுவின் நிருவாக நடைமுறைக்கோவை ஏற்பாடுகளுக்கமைய பதவி ஒன்றுக்கான வெற்றிடம் ஏற்படுவதற்கு 03 மாதங்களுக்கு முன்னரே விண்ணப்பம் கோரப்பட வேண்டும். அதன்படி ஒரு அதிகாரி ஓய்வுபெறும் அன்றைய தினத்திலேயே புதிய அதிகாரி பதவி ஏற்கும் வகையில் அந்நியமனம் இடம்பெற வேண்டும்.

இலங்கை கல்வி நிருவாக சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்குரிய நியமன அதிகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவுக்குரியதாகும்.

இது தொடர்பான நேர்முகப் பரீட்சை சபையில் அரச சேவை ஆணைக்குழுவின் அதிகாரி, கல்வி அமைச்சு அதிகாரி, குறித்த மாகாணத்தின் ஆளுனரது பிரதிநிதி ஆகியோர் இடம்பெற வேண்டும்.

மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் 2004ஆம் ஆண்டு காலப் பகுதி வரை மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவியானது அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நேரடியாக நிரப்பப் பட்டு வந்தது.

இதன் பின்னர் மாகாண ஆளுனர்களால் மாகாண கல்வி பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட்டபோதும் அதற்கான ஒத்திசைவை அரச சேவை ஆணைக்குழு வழங்கி வந்தது. ஆனால் புதிய சேவைப் பிரமாண குறிப்பு அதற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.



எனவே மாகாண கல்விப் பணிப்பாளர் பதவியை, சேவை மூப்புக்கூடிய தகுதியான கல்வி நிருவாக அதிகாரியைக் கொண்டு முறைப்படி நிரப்புவதற்கு உடனடியாக விண்ணப்பம் கோரப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.




# தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்



தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் பேராலயத்தில் சனிக்கிழமை மாலை 05.46 மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் நடைபெற்றது. நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற கொரோனா தொற்று நீங்கவும், மக்கள் துன்ப துயரங்கள், நோய்கள் இன்றி மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஆசிவேண்டி இந்த யாகம் நடத்தப் பட்டது.

இவ் யாகத்ததினை சிவஸ்ரீ கஜன் குருக்கள் மற்றும் பஹவான் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகளின் சீடர்களில் ஒருவரான சுவாமி பரதன் தயாளன் ஆகியோர்இணைந்து , ஹோமகிரியைகள் ஆரம்பமாகின. மஹாம்ருத்யுஞ்ஜய மந்திரங்கள் உச்சாடனம் செயற்பட்டு அக்கினியில் ஆகுதிகள் சொரியப்பட்டன.

புத்தசாசன சமய விவகார கலாசார அலுவல்கள் அமைச்சின் வேண்டுகோளுக்கமைய இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆலய பரிபாலனசபையின் ஆதரவோடு நடைபெற்ற யாக பூசையில் , ஆலய பரிபாலன சபையின் வண்ணக்கர்கள், ஊடகவியலாளர்கள் என மிகவும் குறைந்தளவிலானவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயர் தரப் பரீட்சை பெறுபேறு, மட்டு. மத்தி கல்வி வலயம் முன்னணியில்:

## முன்னாள் அமைச்சர் சுபையிர் வாழ்த்து!

(ஆதம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து, பல்கலைக் கழகம் செல்வதற்கு தகுதி பெற்றுள்ளதாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டு, மாவட்ட தலைவருமான எம்.எஸ்.சுபையிர் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களம் அண்மையில் வெளியிட்டது. குறித்த பெறுபேற்றின் பிரகாரம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து, வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கொரோனா கெடுபிடிகளுக்கு மத்தியிலும், பாடசாலைகள் மற்றும் மேலதிக வகுப்புக்கள் முடக்கப்பட்ட நிலையிலும், சுயமாகவும், இணைய வழியாகவும் கற்றலில் ஈடுபட்டு மட்டு, மத்தி வலய மாணவர்கள் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

அந்தவகையில், குறித்த பெறுபேற்றின் அடிப்படையில் வைத்தியத்துறைக்கு 13பேரும், பொறியியல்துறைக்கு 11பேரும், தொழிநுட்பத் துறைக்கு 30பேரும், கலைத்துறைக்கு 60பேரும், வர்த்தகத்துறைக்கு 54பேரும் பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதி பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தொடர்பில் (07) கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் இம்முறை அதிகூடுதலான மாணவர்களை சித்தியடையச் செய்து வரலாற்றுச் சாதனையினை நிகழ்த்தியுள்ளது. இவ்வாறான சாதனையை நிகழ்த்தி வலயத்திற்கு பெருமை சேர்த்த மாணவர்களுக்கு, வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன். இவ்வாறான வரலாற்றுச் சாதனையை நிகழ்த்துவதற்கு உழைத்த பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களை



தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தினுடைய கல்வி அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற வலயக்கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா உள்ளிட்ட கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசியல்வாதிகள், பாடசாலைச் சமூகத்தினருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகர்களுக்கான வருடாந்த இடமாற்றம் இரத்து

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்குமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலர்களுக்கான வருடாந்த இடமாற்றம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்ற சபையின் முடிவுகள் கிழக்கு மாகாண இணையத்தளமான EP.gov.lk எனும் மாகாண சுகாதார சேவைகள் வலைப் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப் பட்டுள்ளதுடன்



மேன்முறையீட்டு இற்கான விண்ணப்ப படிவமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கோவிட்-19 சூழ்நிலை காரணமாக 2020 எட்டாம் மாதம் 29ஆம் திகதி வருடாந்த இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த முடியாது போயிருந்த நிலையில் இம்முறை 2021 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்ற சபையின் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும்தற்காலிகமாக இடமாற்றங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# டெங்கிலிருந்து மக்களை காக்க புகைவிசிறலை ஆரம்பித்துள்ள காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம்!

(நூருல் ஹுதா உமர்)

கொரோனா நாட்டில் வேகமாக பரவுவதை போன்று மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கும் பரவலாக நாட்டில் பரவும் அபாயம் நிலவி வருகிறது. இதனை கட்டுப்படுத்தும் முகமாக காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீரின் ஆலோசனை யுடன் டெங்கை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய சுகாதார துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக டெங்கு காய்ச்சல் அபாயத்தில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக மாளிகைக்காடு, காரைதீவு 12



மற்றும் காரைதீவு 05 ஆம் பிரிவில் உள்ள இடங்களில் புகைவிசிறல் செயற்பாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றதுடன் மக்களுக்கு விழிப்புணர்வு அறிவித்தல்களும் இதன்போது வழங்கப்பட்டது. அடிக்கடி மழை பெய்து கொண்டிருப்பதால் சுற்றுச்சூழலில் தண்ணீர் தேங்கி நிற்கக்கூடிய இடங்களையும், நுளம்பு பெருகும் பொருட்கள் அனைத்தையும் அகற்றி டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளனர்.

# கல்முனை விவகாரத்தில் முஸ்லிம்கள் = கை கோர்க்க வேண்டும்! =



(பைஷல் இஸ்மாயில்)

கிழக்கில் முஸ்லிம்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகள் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் மாறுபட்டது. எனவே இங்கிருக்கின்ற கள நிலையை புரிந்து, விமர்சனங்களுக்கு அப்பால் முஸ்லிம் தலைமைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று CASDRO அமைப்பின் அம்பாறை மாவட்டத் தலைவர் எம்.ஜே.எம்.அன்வர் நௌஷாத் தெரிவித்தார்.

கல்முனை விவகாரம் தொடர்பில் நேற்று அட்டாளைச்சேனை அவரது காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு முஸ்லிம் மக்களின் பாரம்பரிய வாழ் நிலங்களும், விவசாய காணிகளும் தமிழ் தரப்பினரால் அடாத்தாக பிடித்து வைக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் கிழக்கின் முஸ்லிம் தலைநகரான கல்முனை நகரை அபகரிக்க முயல்கின்ற தரப்பினரோடு முஸ்லிம்கள் சேர்ந்து எவ்வாறு இயங்க முடியும்.

வரலாற்றில் முஸ்லிம்கள் தமிழருடன் ஒன்றிணைந்து பயணித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் தலைமைகள் காலை வாரியுள்ள நிகழ்வுகள் நமது அரசியல் பயணத்தில் (மறுக்க) மறக்க முடியாதது. 1915 ல் கண்டி, கம்பளை கலவரம் தொடக்கம் தமிழ் தலைமைகள் எவ்வாறு நடந்து கொள்கின்றன என்பது வரலாற்று சான்று.

இந்நிலையில், கிழக்கு முஸ்லிம்களின் மனோ நிலையை இந்நாட்டின் சகல பிரதேச முஸ்லிம்களும் புரிந்து அதற்கான ஒத்துழைப்பு செய்ய வேண்டும் என நாம் வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றோம். நாட்டில் தோன்றியுள்ள அனாவிசமான அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு நமது முஸ்லிம் தலைமைகள் முடிவுகளை மேற்கொள்ளும் போது அவற்றின் பின் நியாயாதிக்கங்களை புரிந்து கொண்டு செயற்படுதல் மிக அவசியமானதாகும்.

முதலாளித்துவ மனோநிலை, பிரபுத்துவ சிந்தனை என்பன இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மிக மோசமான தாகும்.

இவற்றை அடியொட்டிய தலைமைத்துவ சிந்தனை தலைகளில் இருந்து நாம் வேறுபட்டு, இன்றிருக்கின்ற சூழலில் மீண்டும் நம் சமூகம் மீலெழுச்சி பெற உண்மையாக உழைக்க நாம் ஒன்றுபடுவோம் என்றார்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# மருதமுனை பிரதேச கடற்கரைப் பகுதிக்கு பொதுமக்கள் வருவது தற்காலிகமாக தடை

## மருதமுனை கொரோனா தடுப்புச் செயலணி தீர்மானம்!



(பி.எம்.எம்.ஏ.காதர்)

மருதமுனை பிரதேச கடற்கரைப் பகுதிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் பொதுமக்கள் வருவது இன்று 2021-05-10ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரும் வரை தடைசெய்யப்பட்டுள்ளதாக மருதமுனை கொரோனா தடுப்புச் செயலணி அறிவித்துள்ளது. நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் சனிக்கிழமை (08) மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விஷேட கலந்துரையாடலின் போதே ஏகமனதாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகரும், சமூகப் பொலிஸ் பொறுப்பதிகாரியும், கொரோனா கட்டுப்பாட்டுப் பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட், மருதமுனை ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.ஹுசைனுதீன் றியாழி, மருதமுனை தாறுல்ஹுதா மகளிர் அறபுக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி அஷ்ஷெய்க் எம்.எல்.முபாறக் மதனி, மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி அதிபர் எம்.ஜே.அப்துல் ஹசீப், ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் ஏ.எல்.சக்காப், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள், கழகங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு ஏகமனதாக மேலும் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன:-

தொழில் நிமித்தம் வெளி இடங்களுக்குச் சென்று ஊர் திரும்புகின்றவர்கள் தங்களின் வருகையை தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தர் அல்லது பொதுச் சுகாதாரப்பரிசோதகர் ஆகியோரிடம் அறிவிக்க வேண்டும். இவர்கள் இனங்காணப்பட்டு அன்டிஜன் பரிசோதனை செய்தல், வெளி இடங்களில் இருந்து மருதமுனை கடற்கரைக்கு வருகின்றவர்களைக் கட்டுப்படுத்தல், வர்த்தக நிலையங்களுக்கு வருகின்ற பொது மக்களை கட்டுப்படுத்தல், கடற்கரைப் பிரதேசத்தில் புதிதாக கடைகள் வைப்பதையும் தடைசெய்தல், தேவையற்ற வகையில் வீதிகளில் சுற்றித்திரிகின்ற இளைஞர்களை கட்டுப்படுத்தல் கட்டுப்படாதவர்களுக்கு எதிராக பொலிஸ் மற்றும் இராணுவத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுத்தல் அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளுதல்,.

மேலும் அயல் கிராமங்களில் இருந்து மருதமுனை கடற்கரைக்கு வருகின்றவர்களின் வருகையைத் தவிர்த்துக்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை அந்தந்த கிராம பள்ளிவசல்கள் ஊடாகத் தெரியப்படுத்துதல், இவற்றை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக பொலிஸ் மூலம் சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. இந்தத் தீர்மானங்களை துண்டப்பிரசுரத்தின் மூலமும். ஒலிபெருக்கிகள் மூலமும் அறிவித்தல் மேற்படி தீர்மானங்களை முன்னெடுப்பதற்கும், கண்காணிப்பதற்கும் பொலிஸாரும். இராணுவத்தினரும். சுகாதாரப் பரிசோதகர்களும், கொரோனா தடுப்புச் செயலணி உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# போதை மாத்திரை,ஹெரோயினுடன் கல்முனையில் ஒருவர் கைது

**(பாறுக் ஷிஹான்)**

பழைய இரும்பு விற்கும் போர்வையில் 590 க்கும் அதிகமான போதை மாத்திரை அடங்கிய பெட்டிகள் மற்றும் ஹெரோயினுடன் பட்டா வாகனத்தில் பயணம் செய்து விற்பனை செய்த ஒருவரை கல்முனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை மாநகர பிரதான வீதியால்நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சந்தேக நபர் வட்ட வாகனம் ஒன்றில் சந்தேகத்திற்கிடமாக நடமாடுவதாக மாவட்ட புலனாய்வு பிரிவு மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து மாறுவேடம் அணிந்து சென்ற கல்முனை பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா பகுதியில் இருந்து இவ்வாறு 590 போதை



மாத்திரைகளை கடத்தி தற்போது கைதானவர் சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 25 வயதுடைய இரும்பு சேகரித்து விற்பனை செய்பவர் எனவும் அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்களுக்கு குறித்த போதை அடங்கிய மாத்திரைகளை விநியோகித்து வந்துள்ளதாக விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் இச்சுற்றிவளைப்பின் போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்த வழிகாட்டலில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் வை. அருணன் தலைமையிலான பொலிஸ் கொஸ்தாபல்களான செலர்( 40313 ) , ரதீஸ்குமார்( 89382 ), நிமால் (81988), போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களான , பண்டார (51423) ,அதிகாரி(47526) , அமரசிங்க (74645) ,பொலிஸ் சாரதி ரெஜிபவன்(3893) ,மற்றும் சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் றிஹால் (6045)ஆகிய பொலிஸ் குழுவினர் இத்தேடுதலில் பங்கேற்றிருந்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட 590 போதை மாத்திரகள் மற்றும் ஹெரோயின் மற்றும் சந்தேக நபர் போதை மாத்திரைகளை கடத்த பயன்படுத்திய வட்டா ரக வாகனம் என்பன கல்முனை நீதிவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மக்களாணை, இறைமை, அரசியல் யாப்பு என்பவற்றை துறைமுக நகரச் சட்ட மூலம் மீறுகின்றது

**(துறையூர் சஞ்சயன்)**

மக்களாணை, இறைமை, அரசியல் யாப்பு என்பவற்றை துறைமுக நகரச் சட்ட மூலம் மீறுகின்றது என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

துறைமுக நகரச் சட்ட மூலம் தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை குடியாட்சி முறைமையுள்ள நாடு என்ற வகையில், மக்கள் இறைமை கொண்டவர்கள். சட்டவாட்சி முறையுள்ள நாடு என்ற வகையில், சட்டம் இறைமையுள்ளதாக அமைய வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் மக்களாணையைப் பெறுகின்றபோது நாட்டின் வளங்களை பிற நாடுகளுக்குத் தாரை வார்க்க மாட்டேன் என்று இப்போதைய ஜனாதிபதி கூறியிருந்தார். அதன்படி ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை வழங்கினர். துறைமுக நகர விடயத்தில் 99 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்



கப்படுகிறது. 45 ஆண்டுகள் வரிச்சலுகை வழங்கப்படவுள்ளது என்ற வகையில் மக்கள் இறைமையால் வழங்கப்பட்ட மக்களாணை மீறப்படுகிறது. எனவே, இறைமை மீறப்படுகிறது. மேலும் சட்டவாட்சி முறையுள்ள நாடு என்ற வகையில், இலங்கையின் சட்ட இறைமையினால் துறைமுக நகரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாது. ஆயின் சட்ட இறைமையும் மீறப்படுகிறது. இறைமை என்பது மக்கள் இறைமை, சட்ட இறைமை, நாட்டிலுள்ள பகுதியைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் என்ற வகைகளில் பார்த்தால் அவற்றைச் செய்யக்கூடிய சாத்தியப்பாடு அற்றுக்காணப்படுவதால், இறைமை மீறப்படுவதாகக் கூற முடியும்.

மேலும், மேல் மாகாண சபையைத் தவிர்த்துப் பாராளுமன்றத்தில் இந்தச் சட்ட மூலம் கொண்டு வரப்படுவதால் அரசியல் யாப்பினை மீறுவதாக அமைகிறது. அதாவது சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும் முறை அரசியல் யாப்பினை மீறுவதாக அமைகிறது என்பது சட்ட ரீதியான பார்வையில் தெரிகிறது. அதாவது தவறாக எறியப்படும் துறைமுக நகரச்சட்ட மூலக் கல்லால் தப்பாக மூன்று கனியாத மாங்காய்கள் வீழ்த்தப்படுவதாகக் கூற முடியும்.

கொழும்புத் துறைமுக நகரம், 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம், சிங்கராஜ வனப் பாதிப்பு உட்பட சூழலியல் தொடர்பான செயற்பாடுகள், ஈஸ்டர் ஞாயிறுத்தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை, சீனி இறக்குமதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 1600 கோடி ரூபாய் நஷ்டம் அல்லது மோசடி, நச்சுத் தன்மையான எண்ணெய் இறக்குமதி போன்ற இன்னோரன்ன விடயங்களில் பிக்குமார்கள் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவதுடன் விமர்சிக்கவும் முற்பட்டுள்ளனர்.

தேர்தல் வெற்றிக்காக வாக்குறுதிகளை வகை தொகை இல்லாமல் சொல்லி விடலாம் அவற்றைச் செய்வதுதான் கடினம் என்பதை அரசியலாளர்கள் உணரவே மாட்டார்கள். இன மத அடிப்படைவாத இலங்கையில் அரசாங்கத்தை ஆக்குவதிலும் அகற்றுவதிலும் பௌத்த பிக்குகள் முக்கியமானவர்கள் என்பது எழுதாத விதிகளாகும். அரசாங்கத்தை ஆக்கியவர்கள் அகற்ற நினைத்தால் அதுவும் எழுதாத விதியாகத்தான் இருக்கும். அதனைத் தடுக்க தமிழ்பேசும் மக்கள்தான் பலிக்கடாக்கள் ஆகவும் கூடும்.




# சாணக்கியனை இலக்கு வைப்பது ஆரோக்கியமானதல்ல

**சட்ட முதுமானி வை.எல்.எஸ். ஹமீட்**

அவர் எழுதிய கட்டுரையெ ான்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**கட்டுரையின் முழுவடிவம்**

ஜனாசா எரிப்புக் காலத்தில் பல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம்களுக்காக பலமாக குரல்கொடுத்தார்கள். இவர்களுள் திரு சாணக்கியன் முதன்மையானவர். இதன் காரணமாக முஸ்லிம்கள் சாணக்கியனைப் பாராட்டியும் நன்றி தெரிவித்தும் எழுதினார்கள்; பேசினார்கள்.இதற்குக் காரணம் அவர்கள் வெறுமனே பேசியதல்ல. தாங்கள் வாக்களித்துத் தெரிவுசெய்தவர்கள் சோரம்போய் மௌனிகளான நிலையில் இவர்கள்மீது முஸ்லிம் சமூகம் பாரிய வெறுப்பினைக் கொண்டிருந்தது

எனவே, அச்சூழலில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குரல்கொடுத்ததும் நன்றி உணர்வு ஒரு பக்கமும் இவர்கள் மீது கொண்ட வெறுப்பு மறுபக்கமுமாக இணைந்தே தமிழ் உறுப்பினர்களுக்கான பாராட்டாகவும் நன்றி நவிலலாகவும் வெளிப்பட்டது. மக்கள் தேர்தல் சமயத்தில் சிந்திக்கமாட்டார்கள். தேர்தல் முடிந்ததும் தன் கையறுநிலைக்காக கதறுவார்கள். இது அவர்களது தலைவிதி. அதேநேரம் தாம் சோரம்போயிருந்த நிலையில் தமிழ் உறுப்பினர்கள் நமக்காக குரல் கொடுத்ததையும் நம்மவர்கள் அவர்களைப் பாராட்டியதையும் நமது வாக்குகளைப் பெற்றவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

எனவே, தங்கள் ஆதரவாளர்கள்மூலம் அப்பொழுதே இத்தமிழ் உறுப்பினர்களுக்கெதிரான விமர்சனத்தைத் தொடங்கிவிட்டார்கள். அவர்களின் கடந்தகால செயற்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கினார்கள். அவர்களின் எண்ணங்களை சந்தேகச்சந்தையில் விலைபேசினார்கள்.

சொல்பவனைப் பாராதே; சொல்லைப் பார். என்கின்றது; மார்க்கம். தாங்கள் வாக்களித்த மக்களை நட்டாற்றில் விட்டது; குற்றமில்லை. ஆனால் நாங்களும் பேசமாட்டோம்; நீங்களும் பேசக்கூடாது. நீங்கள் பேசினால் எங்கள் செல்வாக்கை அது மேலும் பாதித்துவிடும். எங்களுக்கு சமூகத்தைப்பற்றிக் கவலையில்லை; எங்களைப்பற்றியே கவலை என்பதாக அவர்களது நிலைப்பாடு இருந்தது. முஸ்லிம்களுக்காக குரல்கொடுத்த தமிழ் உறுப்பினர்களுள் சாணக்கியன் முதன்மையானவர் என்பதனால் அவரே இவர்களது பிரதான இலக்காக மாறினார். இந்நிலையில் வட கிழக்கை இணைத்து தேர்தல் நடாத்தினால் தான் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடத்தயார் என திரு சாணக்கியன் அறிவித்தார்.

கிடைத்தது துரும்பு; விட்டுவிடக்கூடாது; என்று சாணக்கியனுக்கு எதிராக புதிய விமர்சனக் கணைகள் பாய ஆரம்பித்தன. நாம் வட கிழக்கு இணைப்புக்கு உடன்படமாட்டோம்; என்பது வேறுவிடயம். வட கிழக்கு இணைப்பு என்பது அவர்களது தொடர்ச்சியான நிலைப்பாடு. தான் முஸ்லிம்களுக்காக பேசியதற்காக அவர்கள் அந்த நிலைப்பாட்டைக் கைவிடவேண்டுமென நாம் எதிர்பார்க்க முடியுமா? தான் முஸ்லிம் கட்சியொன்றில் போட்டியிடப் போவதாக அவர் கூறினாரா? அதனை நாம் விமர்சிக்க என்ன இருக்கிறது? ஆனாலும் விமர்சித்தார்கள்.

இந்நிலையில் கல்முனை உப பிரதேச செயலக விடயத்தில் திரு சாணக்கியன் அக்கறை காட்டினார். இதை அடுத்த துரும்பாக இவர்கள் கையிலெடுத்தார்கள். சாணக்கியனுக்கெதிராக அடுத்த சுற்று விமர்சனம் ஆரம்பித்தது.

கல்முனை உப பிரதேச செயலக விடயத்தில் சகல தமிழ் உறுப்பினர்களும் ஒரே நிலைப்பாட்டில்தான் இருக்கிறார்கள். அதற்கு நமது பலவீனமும் ஒரு காரணம். இன்றுவரை, கல்முனையைக் கூறுபோடாமல் கல்முனையை விட்டுவிட்டு பிரதேச செயலகத்தை பெற்றுக்கொள்ளுங்கள்; என எங்காவது பேசியிருக்கிறார்களா?

கடந்த ஒரு சில தினங்களுக்குமுதல் பாராளுமன்றில் கீஈஏகு மற்றும் அஷ்ரப் வைத்தியசாலை தொடர்பாக ஒரு சறுக்கலான உரையை திரு சாணக்கியன் ஆற்றியிருந்தார். அதற்குப் பாராளுமன்றில் பதிலளித்ததாக முகநூலில் பெருமைப்பட்ட நம்மவர்களின் உரையில் இந்த விடயங்களுக்கு பதில் இருந்ததா? ஆகக்குறைந்தது 'கல்முனையை விட்டுவிட்டு செயலகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்றாவது அந்த உரையில் கூறப்பட்டதா?

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம்குறைத்து உப பிரதேச செயலகமா ஆக்கியதாக சாணக்கியன் உட்பட பல தமிழ் உறுப்பினர்கள் பாராளுமன்றில் குறிப்பிட்டார்கள். இன்றுவரை தமிழர்களின் போராட்டமே கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த வேண்டுமென்பதுதான்.

தரமுயர்த்த வேண்டுமென்றால் அதன் பொருளென்ன? தற்போது அது பிரதேச செயலகமல்ல; என்பதுதானே. பிரதேச செயலகமில்லை; என்றால் அதன்பொருளென்ன? அது ஒரு உப பிரதேச செயலகம் என்பதுதானே! இரண்டிற்கும் இடையில் ஒன்று இருக்கின்றதா? இல்லையே! அவ்வாறெனில் தரம் குறைத்ததாக தமிழ் உறுப்பினர்கள் எவ்வாறு பேசமுடியும்? அவ்வாறாயின் அது செயலக தரத்தில் இதுவரை இருந்ததா? அவ்வாறு இருந்திருந்திருந்தால் இதுவரை அவர்கள் போராடியது; எதைத் தரமுயர்த்துவதற்காக? என்ற கேள்வியையாவது பாராளுமன்றில் எழுப்பமுடிந்ததா?

எதையெதையோ பேசிவிட்டு, தனிப்பட்ட வசைபாடல்களையும் பாடிவிட்டு வந்து ஏதோ பதில்கொடுத்ததாக முகநூல்களிலும் பெரும் பீடிகை போட்டுவிட்டு தமது ஆதரவாளர்களைக்கொண்டு சாணக்கியனை வைதுகொண்டிருப்பதன் பொருளென்ன?

சாணக்கியனை வைவதன்மூலம் தம்மீது மக்களுக்கு இருக்கும் அதிருப்தியை சாணக்கியன்மீது திருப்பலாம்; என்பதா?

அவர்களிடம் சிற்றினவாதம் இருக்கிறது; என்பது மறுக்கமுடியாத உண்மை. அது தொடர்பாக பல ஆக்களில் நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். அதில் ஒன்றுதான் கல்முனை விவகாரமும். அதேநேரம் நாம் உடன்பாடில்லாதபோதும் வட கிழக்கை இணைக்க வேண்டுமென்பது அவர்களுடைய கொள்கை.

அவை தொடர்பாக பொதுவாகப் பேசலாம்; அதில் தவறில்லை. ஆனால் முஸ்லிம்களுக்காக சாணக்கியன் பேசினார்; என்பதற்காக அவரை இலக்கு வைத்து நாம் முன்னெடுக்கும் எல்லை தாண்டிய பிரச்சாரம் ஆரோக்கியமானதல்ல. இழந்துவிட்ட தம் ஆதரவை சாணக்கியன் நமக்காக பேசினார் என்பதற்காக அவருக்கெதிராக தனிப்பட்ட முறையில் வசைபாடி தமது செல்வாக்கை சரிக்கட்ட முயல்முவது ஆரோக்கியமற்றது.

மட்டுமல்ல, இன்று தோற்றம் பெற்றிருக்கின்ற இன்னுமொரு கலாச்சாரம் சில அரசியல்வாதிகள் தொலைக்காட்சி விவாதத்திற்கு சென்று எதிராளியிடம் நன்கு வாங்கிக்கட்டுவது; அல்லது நிகழ்ச்சி நடத்துபவரின் கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாமல் முழிப்பது; அல்லது பாராளுமன்றில் தமக்கெதிரான விமர்சனங்களுக்கு பதில் சொல்லமுடியாமல் சொதப்புவது;

அதன்பின் ஆதரவாளர்கள் முகநூலில் சம்பந்தப்பட்டவர்களுக்கு பதில் சொல்வது; அவர்களை விமர்சிப்பது. ஆதரவாளர்கள் பதில் சொல்வதென்றால் ஒன்றில் தேர்தலில் அவர்களை நிறுத்தி வெல்லவைத்திருக்கவேண்டும் அல்லது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு அந்த ஆதரவாளர்களை அனுப்பியிருக்க வேண்டும். இவ்வாறு ஏனைய சமூக அரசியல்வாதிகள் செய்கிறார்களா?

உரிய இடத்தில் பதில் சொல்லத்தெரியாமல் தத்தளிப்பது; ஆதன்பின் ஆதரவாளர்களுக்குப் பின்னால் மறைவது. இயலாத நமக்கு ஏன் இந்தவேலை?

எனவே, முஸ்லிம்கள் தொடர்பான தமிழ்த்தரப்பின் பிழையான நிலைப்பாட்டை நாகரீகமான முறையில் சுட்டிக்காட்டுங்கள். அதைத்தான் நாங்களும் செய்திருக்கின்றோம். அதைவிடுத்து ஆதரவாளர்களை வைத்து ஆரோக்கியமற்றமுறையில் முகநூலைப் பாவிக்கமுற்படாதீர்கள். அவர்களும் அவர்களின் ஆதரவாளர்கள்மூலம் உங்களுக்கு பதிலளிக்கமுற்பட்டால் அது இரு சமூகங்களுக்கும் நன்றாக இருக்காது; என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

**இப்தார் விமர்சனம்**

மறுபுறம் பிரதமருடனான இப்தார் மிக அநாகரீகமாக விமர்சிக்கப்படுகிறது. இவர்கள் பிரதமரை என்ன நோக்கத்திற்காக சந்தித்தார்கள்? என்பது தெரியாது. ஆனால் அது திடீரென இவர்களுக்காக மட்டும் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு, என்பது சற்று சிந்தனையைக் கூர்மையாக்கினால் புரியும். ஏனெனில், அது பொதுவாக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு இப்தாராக இருந்தால் அங்கு ஏனைய ஆளுங்கட்சி முஸ்லிம் எம் பிக்கள் மற்றும் ஆளுங்கட்சியின் முக்கிய முஸ்லிம் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருப்பார்கள்; என்பது ஓர் அரசியல் கத்துக்குட்டிக்கும் புரியும். ( ஊடக அறிக்கைகள் எவ்வாறாவது இருந்துவிட்டுப் போகட்டும்; ஆனால் நாம் பகுத்தறிவுள்ள ஜீவன்கள் என்பதை மறந்துவிடவேண்டாம்.